# ஓஎன்ஜிசி பொதுப்பள்ளி

## நிரவி-காரைக்கால்-609604

பெற்றோர் ஆசிரியர் கூட்டமைப்பு

இடம்: ஒஎன்ஜிசி பொதுப்பள்ளி                                                                 தேதி: 12.08.17

ஒஎன்ஜிசி பொதுப்பள்ளி வளாகத்தில் 12.08.17 அன்று மாலை 3.00 மணியளவில் பெற்றோர் ஆசிரியர் கூட்டமைப்பு இறைவாழ்த்துடன் இனிதே தொடங்கியது. பள்ளியின் முதல்வர் திரு. சுவாமிநாதன் அவர்கள் தமது வரவேற்புரையில் பெற்றோர் ஆசிரியர் கூட்டமைப்பின் சிறப்பினை இயல்பாக எடுத்துக்கூறி வரவேற்புரை நல்கினார். இதனைத் தொடர்ந்து நிகழ்ச்சியின் தொடக்கமாக குத்து விளக்கேற்றும் நிகழ்வில் பெற்றோர் கூட்டமைப்பினை சார்ந்தவர்கள் கலந்து கொண்டு விளக்கேற்றி வைத்து நிழ்வானது தொடங்கியது.

மேல்நிலைப்பள்ளியின் பொறுப்பாசிரியர் அவர்கள் திருமதி.சுமத்திரா அவர்கள் மேல்நிலைப்பள்ளி கடந்த ஆண்டு மாணவர்கள் பொதுத்தேர்வில் மாநில அளவில் மூன்றாம் இடத்தையும், காரை மாவட்ட அளவில் முதல் இடத்தையும் பெற்று சாதனை படைத்துள்ளனர் என்றார். இப்பள்ளியல் பயின்ற மாணவர்கள் மருத்துவம்,பொறியியல் மற்றும் தொழில் சார்ந்த துறையில் சேர்ந்து பள்ளிக்கு பெருமை சேர்த்தனர்.என்றார். பத்தாம் வகுப்பு பொறுப்பாசிரியர் திருமதி கீதாடேனியல் அவர்கள் மாணவர்களின் கற்றல் செயல்பாட்டினை எடுத்துக்கூறுகையில் 48 மாணவர்கள் 10/10 என்ற **A1** தரச்சான்றிதழ் எடுத்து பள்ளிக்கு பெருமை சேர்த்தனர் என்றார். பள்ளியின் நடுநிலைபள்ளி பொறுப்பாசிரியர் திருமதி. உமாமகேஸ்வரி அவர்கள் கற்றல் கற்பித்தல் நிகழ்வினை எடுத்துக்கூறுகையில் மாணவர்களுக்கு ஏற்படும் மனக்குழபபத்தை போக்குவதற்கு குழு அமைக்கப்பட்டு இடர்பாடு உடைய மாணர்களுக்கு ஆலோசனை நல்கப்பட்டு நல்வழிப்படுத்தி கற்றல் செயல்பாட்டில் ஆர்வம் உண்டாக்கப்பட்டது. தொடக்கப்பள்ளி பொறுப்பாசிரியர் திருமதி. மெர்சிஅன்னிபெசன்ட் அவர்கள் தொடக்க மாணவர்களின் கற்றல் செயல்பாட்டினை எடுத்துக்கூறினார். தொடக்கப் பள்ளி மாணர்களுக்கு கற்றல் சார்ந்த செயல்பாடு மட்டும் அல்லாமல் எழுதுதல் திறன், பேசுதல் திறன் போன்ற பயிற்சிகள்மேற்கொள்ளப்படுவதாக எடுத்துக் கூறினார்.

மேல்நிலை வகுப்பு முதல் ஒன்றாம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களின் கற்றல்- கற்பித்தல் தொடர்பான நிகழ்வினை ஆசிரியர்கள் பெற்றோர்களின் முன்னிலையில் தெரிவித்துக்கொண்டனர். மேல்நிலை இரண்டாமாண்டு மாணவர்களுக்கான கற்றல் செயல்பாட்டினை திருமதி. இராஜலெட்சுமி அவர்கள் எடுத்துக்கூறினார். மேல்நிலை முதலாமாண்டு மாணவர்களுக்கான கற்றல் செயல்பாட்டினை திரு.பாக்கியராஜ் அவர்கள் எடுத்துக்கூறினார். பத்தாம் வகுப்பு மாணவர்களுக்கான கற்றல் செயல்பாட்டினை திருமதி.அமுதினிஜீவானந்தம் அவர்கள் எடுத்துக்கூறினார். ஒன்பதாம் வகுப்பு மாணர்களுக்கான கற்றல் செயல்பாட்டினை திருமதி.செல்விகிருஷ்ணன் அவர்கள் எடுத்துக்கூறினார். எட்டாம் வகுப்பு மாணவர்களுக்கான கற்றல் செயல்பாட்டினை திருமதி. ஜெயசெல்வி அவர்கள் எடுத்துக் கூறினார். ஏழாம் வகுப்பு மாணவர்களுக்கான கற்றல் செயல்பாட்டினை திரு. பிரான்சிஸ் சேவியர் அவர்கள் எடுத்துக்கூறினார். ஆறாம் வகுப்பு மாணவர்களுக்கான கற்றல் செயல்பாட்டினை திரு.பிரகாஷ் அவர்கள் எடுத்துக்கூறினார்.ஐந்தாம் வகுப்பு மாணவர்களுக்கான கற்றல் செயல்பாட்டினை திருமதி டார்த்தி அவர்களும் எடுத்துக்கூறினார். நான்காம் வகுப்பு மாணவர்களுக்கான கற்றல் செயல்பாட்டினை திருமதி. திவ்யா அவர்களும் எடுத்துக்கூறினார். மூன்றாம் வகுப்பு மாணவர்களுக்கான கற்றல் செயல்பாட்டினை திருமதி. ஆராதனா வர்மா அவர்களும் எடுத்துக்கூறினார். இரண்டாம் வகுப்பு மாணவர்களுக்கான கற்றல் செயல்பாட்டினை திருமதி. ஜீவாமணி அவர்களும் எடுத்துக்கூறினார். ஒன்றாம் வகுப்பு மாணவர்களுக்கான கற்றல் செயல்பாட்டினை திருமதி. பாக்கியலெட்சுமி அவர்களும் எடுத்துக்கூறினார்.

இதனை அடுத்து மழலையர் பள்ளி மாணவர்களுக்கான கற்றல் புதுமையின் சிறப்பினை மழலையர் பள்ளியின் பொறுப்பாசிரியர் திருமதி. சோபனா அவர்கள் கூறுகையில் கற்றலை விளையாட்டு முறை வாயிலாக கற்பதன் வாயிலாக குழந்தைகளின் தன்னம்பிக்கை திறனும், கற்றல் திறனின் ஊக்குவிப்பு செயல்பாடுகளும் ஏற்படுவதற்கு மிகவும் சிறப்பான அமைகிறது என்பதில் சிறிதளவும் ஐயமில்லை என்றார். அடுத்த நிகழ்வாக பதிர் பருவத்தில் மாணர்களுக்கு ஏற்படும் இடர்பாடுகளும் அதனை சரிசெய்வதற்கான செயல்பாட்டினையும் திருமதி. செல்விகிருஷ்ணன் அவர்கள் எடுத்துக்கூறினார்.

இதனை அடுத்து பெற்றோர்கள் கற்றல் செயல்பாட்டில் இருக்கின்ற நிறைகுறைகளை எடுத்துக்கூறினர். அதற்கு பள்ளியின் தாளாளர் திரு.கண்ணன் அவர்கள் பெற்றோர்கள் அழைப்பினை ஏற்றுவந்ததற்கு நன்றினை நல்கினார். பெற்றோர்களின் கேள்விக்கு கனிவான பதிலையும் மேலும் பெற்றோர்கள் பள்ளி சிறந்த முறையில் வழிநடத்தி செல்வதற்கு உருதுணையாக இருக்கவேண்டும் என்றார் அப்போது தான் பள்ளி மேலும் சிறந்தமுறையில் வளர்ச்சி அடைவதற்கு பெற்றோர்கள்,ஆசரியர்கள் மற்றும் மாணவர்கள் இணைந்து செயல்படவேண்டும் என்று கூறி உரையினை நிறைவுசெய்தார். இறுதியாக பள்ளியின் துணை முதல்வர் திரு. எட்வின்சாமுவேல் நன்றியுரை நல்க விழாவானது 6.00 மணியளவில் இனிதே நிறைவடைந்தது.